# வில்லும் அம்பும்

## (செந்தூராவ் வஸ்தானி)



விக்கிஜாய்குமார்...

# வில்லும் அம்பும்

## (செந்தூராவ் வஸ்தானி)

வணக்கம் அன்பர்களே ....

நான் தான் "வில்லும் அம்பும் "(செந்தூராவ் வஸ்தானி) என்ற தொடர் கதையினை சித்தரிக்கும் சிற்பி ....விக்கிஜாய்குமார்...இந்த தொடரை நான் என் "அன்புக்கும், பாசத்திற்கும். கோபத்திற்கும், ஏக்கத்திற்கும், சிரிப்பிற்கும், பிரதிபலிப்பாய் இருக்கும் உமக்காகத்தான்...

மேலும் இந்த பதிவுகளை மறைக்கவிடாமல்…என் உணர்வுகளை தூண்டி விட்ட இயற்கைக்கும், பற்பல பகல் மற்றும் இரவு நேர கனவுகளுக்கும் நன்றி கூறுகிறேன்....

இரவும் பகலும்... வானமும் பூமியும்...எதிர் எதிரே இருந்த போதும் முடியவில்லையே...சேர முடியவில்லையே...வில்லுக்கு அம்பு எவ்வளவு முக்கியம்...வில் இல்லை என்றால் அம்பு இருந்து பயனில்லை...அதே போல் அம்பு இருந்து வில் இல்லை என்றாலும் புரோஜனம் இல்லை...ஆனால் என்ன செய்வது கால கொடுமை...எவர் சபித்த சபாபமோ தெரியவில்லை...இவை இரெண்டும் சேர்ந்து வாழ்வதே இல்லை...

ஊர் கண் திருஷ்டி பற்றியிருக்கலாம்...இல்லை என்றால் முன்னோரு ஜென்மத்தில் செய்த பிழையாக இருக்கலாம்...அல்லது கடவுள் எழுதிய விதியாக கூட இருக்கலாம்...அதுவும் இல்லை என்றால் இவர்கள் வாங்கி வந்த சாப வரமாக கூட இருக்கலாம்...

பல நேரங்களில் சீறி பாய்ந்து பகைவரை அழித்தது...பசியை போக்க பழங்களை அடித்தது...பழம்பெருமை ஈட்ட பதக்கங்களை குவித்தது...பலர் மனதை காதல் தேவதையை மாறி சூறை ஆடியது...கற்பனை காதல் காவியமாகிய பாகுபலியில் நாயகனையும் நாயகியையும் ஒரு மனதாய் ஈர்க்க உதவியது...

இத்துணை பேரின்பங்களை அள்ளி தூவும் அந்த வில்லுக்கும் அம்புக்கும் ஒருவரில் ஒருவராய் திளைத்து... மோட்சம் பெற்று... அன்பின் வாசமாய்.... இந்த மண்ணுலகத்தின் பிராண வாயுவில் கலந்து போஜனம் செய்ய விடாமல் பண்ணும் அந்த கடவுளை கேட்க்கிறேன்...ஏன் படைத்தாய் இந்த அம்பினை என்று வில்லையும்...ஏன் இந்த வில்லினை படைத்தாய் என்று அம்பையும் புலம்ப வைத்து விட்டாயே கடவுளே...

அரை ஹஸ்தா அளவும் இரு ஹஸ்தா நீளமும் இருந்த என் உறை உலகை விட்டு வெளியே வந்தேன்... வந்த சில நிமிடங்களில் என்னை உன்னில் தொடுத்தார்கள்...எவ்வளவு தூரம் என்னால் உன்னில் என்னை செலுத்த முடியுமோ அவ்வளவு தூரம் என் அன்பை செலுத்தினேன்...நீயும் உன்னால் எவ்வளவு தூரம் என் அன்பை ருசித்து பருக முடியுமோ அவ்வளவு தூரம் ருசித்து பருகினாய்...பருகிய அன்பு பானத்திற்கு பதில் பணம் கொடுக்கும் பொருட்டாய்... நியூட்டனின் கொள்கையை உலகெங்கும் பறைசாற்றும் விதமாய் பளிச்சென்று பருக கொடுத்தாய்...

என்ன பாவம் செய்தேனோ...உன் அன்பு பானத்தில் முழுவதுமாய் திளைத்து மனம் மலர முடியாமல் பாய்ந்து சென்று விட்டேன்...நானாக செல்லவில்லை...செல்வதற்கு மனமும் இல்லை...என்னை அனுப்புவதற்கோ உனக்கும் மனம் இல்லை...ஆனால் காலத்தின் கட்டளை...விதியின் வீண் கோலம் ...

கடவுளிடம் மனம் உவந்து கேட்டோம்...எங்கள் மேல் உன் கருணை பொழியாதா என்று கண்ணீர் விட்டு கதறினாள் அந்த கூர்மையான பாய்ச்சலை கொண்ட அம்பழகி...தென்றலும் புயல் என மாற...அவள் கண்ணீரும் ஆலங்கட்டி மழையாய் கொட்டிட...பிருத்வி லிங்கம் நிலை குலைந்து போனான்...அக்னி லிங்கம் அணைந்து போனான்...ஆகாச லிங்கம் கறுத்து போனான்...வாயு லிங்கம் வாய் அடைத்து போனான்... அப்பு லிங்கம் வேறு வழி இல்லாமல் ஆலங்காட்டியினை திறந்து விட்டான் ...என்ன குழப்பம் என்று பதறி அடித்து ஓடி வந்தார் இறைவன்...பதறி பயணித்த நொடிகளில் ஐம்பூதங்களும் குழப்பத்திற்கான காரணத்தை கரம் நீட்டின...

கண் அருகே தோன்றிய இறைவன் இவ்வாறு செப்புகிறார்..அன்புக்கு பெயராய் நடமாடும் அம்பழகியே..உன் விழியோர வெள்ளத்திற்கு காரணத்தை நான் அறிவேன்...உங்கள் பேரன்பு கண்பட்டு விட்டது...மேலும் நீ தவம் இருந்து பெறப்பட்டவள் என்று அம்பழகிடம் சொல்லி....நீங்கள் இருவரும் ஒருவர் அருகில் ஒருவர் தான் இருப்பீர்கள்...ஆனால் புறஉலகத்திற்கு அருகருகையே வாழ வேண்டும் என்பது விதி...நீங்கள் மனதால் ஒருவரில் ஒருவராய் திளைத்து நிச்சயம் மோட்சம் பெறுவீர்கள்...உனக்கு மோட்சம் அவனாலே...அவனுக்கு மோட்சம் உன்னாலே...என்று சொல்லி கண்ணருகில் இருந்து மறைகிறார் அந்த விதி மாற்ற முடியாத இறைவன்... (தொடரும் )...